**தலைப்பு 229 – சட்டமா அதிபர் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று கூற்றுடன் கூடிய 2019 டிசெம்பர் 31 ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நீதி நிர்வாகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 12 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்நிதிக்கூற்றுக்கள 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் , மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு

நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) 3 விடயங்களுக்கான மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த கடந்த வருடத்திற்கான ஒத்த மீதிகள் மற்றும் கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் அவ்விடயங்களுக்குரியதாக காட்டப்பட்ட மீதிகளுக்கிடையே மொத்தம் ரூபா 58,500,819 ஆன வேறுபாடு காணப்பட்டது. இது சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிராமையால் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கி இருக்கவில்லை.

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான திணைக்களத்தின் கூட்டுத்தாபன பிரிவினால் கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கான சட்ட கட்டணங்களாக பட்டியலிடப்பட்ட வருமானமான ரூபா 125,705,333 வினை காசாக ரூபா 52,331,183 அறவிடப்பட்டிருந்தமையால் நிலுவை வருமானம் ரூபா 73,374,150 ஆயிற்று. ஆனால் நிதிக் கூற்றுக்களில் நிலுவை வருமானமாக ரூபா 68,693,091 காட்டப்பட்டுள்ளமையினால் நிலுவை வருமானத்தில் ரூபா 4,681,059 க்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அறவாகவுள்ள வருமானத்தினை பிழையின்றி நிதிக் கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி கூட்டுத்தாபன பிரிவுக்கு கிடைத்திருந்த காசோலைகள் 2020 சனவரி மாதம் முதல் வாரத்தினுள் கணக்குப் பிரிவுக்கு கிடைத்ததன் காரணமாக கூட்டுத்தாபன பிரிவின் 2019 ஆம் வருட வருமானமாக கணக்கிலிடப்பட்ட மேற்கண்ட பெறுமதி கொண்ட காசோலைகள் சட்டமா அதிபரின் கணக்கில் 2020 ஆம் வருடம் சனவரி மாதம் வரவு வைக்கப்பட்டிருந்தது. |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான செலவின கூற்றின் படி (ACA2(II)) மீளாய்வாண்டினுள் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக செலவின விடயம் 2104 கீழ் வகித்த ரூபா 416,857,292 க்கான செலவினம் நிதியல்லா சொத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டினுள் வகிக்கப்படும் மொத்த செலவினம் தொடரும் வேலையின் கீழ் குறிக்கப்பட்டு வருட இறுதியில் முடிக்கப்படாத வேலை என காட்டப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டினுள் செய்யப்பட்ட கொடுப்பனவுகளும் தவறுதலாக 2019 ஆம் ஆண்டின் ஆரம்ப மிகுதியினுள் அடங்கியுள்ளது. |

## 1.6.3 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

மாதிரிகளுக்கான கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு, பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றன.

| | சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 571 | ரூபா 460,457 பெறுமதி வாய்ந்த காலாவதியான வைப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான வைப்பு சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571(1)(2)(3) இன் படி செயல்பட வேண்டும். | 2016 ஆம் ஆண்டில் சுருக்கெழுத்தாளர் சேர்த்துக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட பரீட்சைக்காக பரீட்சார்த்திகள் செலுத்திய பரீட்சைக் கட்டணம் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 880(1), 2011 சனவரி 11 ஆந் திகதிய 01/2011 ஆம் இலக்க மற்றும் 2014 மே 07 ஆந் திகதிய 01/2011 (1) ஆம் இலக்கம் கொண்ட நீதி அமைச்சின் சுற்று நிருபம் | பிணை வைக்க வேண்டிய 04 உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை வைப்பு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 880 அமைவாக பொதுப் பணம் மற்றும் முத்திரைக்கு பொதுப்பாய்வுள்ள வவுச்சார் சான்றுப்படுத்தும் மற்றும் காசோலை கைச்சாத்திடும் உத்தியோகத்தர் இடமிருந்து பிணை அதிகார சட்ட மூலத்திற்கு அமைவாக பிணை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | பிணை வைப்புக்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | பொது பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.4 வழிகாட்டல் | ஏற்பாடுகளுக்கு அமைவாக வேலைக்கான ஏதாயினும் ஒரு ஒப்பந்தத்திற்காக ஏற்றுக் கொள்ளக்கூடிய பிணை முறி மீதான ஆகக் கூடியது நூற்றுக்கு இருபது வரையிலான முற்பணம் செலுத்தலாம் அப்படியாயினும் திருத்த | பொது பெறுகை வழிகாட்டல் கோவையின் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக செயல்பட வேண்டும். | இராணுவ 06 வது பொறியியல் சேவை திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருப்பதால் பிணை முறியொன்று இன்றி முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது. |

வேலைக்காக முன் வைக்கப்பட்டிருந்த ரூபா 3,187,460 க்கான நிர்மாண மதிப்பீடொன்றிற்கு ரூபா 1,000,000 அல்லது நூற்றுக்கு 31.37 க்கான முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான பிணை முறியும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருமானம் மதிப்பீடு செய்தல் | | |
| மீளாய்வு ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 62,000,000 ஆன போதும் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 125,705,333 ஆன படியினால் மதிப்பீட்டினை விஞ்சிய பட்டியலிடல் ரூபா 63,705,333 ஆக இருந்தது. | வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் வருமான மதிப்பீடுகளை தயாரிக்கும் காரியத்தினை தொடர்ந்தும் மீளாய்வு செய்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் செய்யப்படுதல் வேண்டும். | சட்ட சேவைகள் வழங்குவதனை அதிகமாக்கியதனால் வருமானம் கூடியுள்ளது. |
| (ஆ) நிலுவை வருமானத்தினை அறவிடப்படுதல் | | |
| மீளாய்வாண்டு இறுதியில் முழு நிலுவை வருமானம் ரூபா 269,691,737 ஆகி இருந்ததுடன் அதில் 3 வருடங்களை தாண்டிய ரூபா 173,944,484 இருந்தது. | அரசுக்கு அறவாக வேண்டி இருக்கின்ற வருமானங்களை காலதாமதமின்றி அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்காக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (இ) வருமானங்களை கணக்கிலிடுவதில் கால தாமதம்<br>------------------------------------------------<br>நிதிப்பிரமாணம் 177(1) படி நாளாந்தம் சேகரிக்கப்படும் வருமானங்கள் கால தாமதமின்றி பொது வருமானத்தில் கணக்கிலிடப்பட வேண்டி இருந்தும் சட்டமா திணைக்களத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் வருமானம் அரசு வருமானத்தில் கணக்கிலிடுதல் 07 முதல் 10 நாள் வரையிலான காலதாமதத்தின் பின் செய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 177(1) படி நாளாந்தம் சேகரிக்கப்படும் வருமானம் காலதாமதமின்றி பொரு வருமானத்தில் கணக்கிலிடப்பட வேண்டும். | காசோலை, தொகையில் ஒரே முறையில் பெறப்படுவது மற்றும் விடுமுறை நாட்களையும் கவனத்திற் கொள்ளும் போது சில நாட்களுக்கான தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் எதிரில் அந்த நிலைமையினை சரி செய்து கொண்டு அவ்வாறான கால தாமதம் ஏற்படாதவாறு காசோலைகளை கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பொருளாதார கொள்கைகளுக்கான அபிவிருத்தி அமைச்சின் சில சுற்றறிக்கைகளின் மூலமாக அரச ஊழியர்களின் வெளிநாட்டு பயணங்கள் மீள் அறிவித்தல் வரை நிறுத்தும்படியும் வெளிநாட்டு பயணங்களுக்கான செலவினங்களை இயன்றளவு குறைக்கும் படியும் மற்றும் மேலதிக ஒதுக்கீட்டுக்கான வேண்டுகோள் செய்யாதிருக்கும் படியும் அறிவித்திருந்தது. வெளிநாட்டு செலவுக்காக | சுற்றறிக்கை ஏற்பாடு களுக்கமைவாக செயற்பட வேண்டும். | ஒதுக்கீடு பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டும் போதுமான ஒதுக்கீடு கிடைக்காத போதும் மேற்படி பயணிகளின் அத்தியாவசியத்தை முன்னிட்டு கணக்காய்வு விசாரிப்பில் குறிக்கப்பட்டுள்ளவாறு செயலாற்ற வேண்டி இருந்தது. பிறகு நிதிப் பிரமாணம் 66 மாற்றுவதன் மூலமாக ஒதுக்கீடு ஏற்பாடுகள் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகள் சரி செய்து கொள்ளப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 27,000,000 க்கான தேறிய ஒதுக்கீட்டு பணத்தில் 2019 செப்தெம்பர் மாதம் ஆகையில் ரூபா 21,097 க்கான மிகுதி மட்டும் சேமிக்கப்பட்டிருந்தது. ஆயினும், 2019 அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த வெளிநாட்டு பயணங்களுக்காக 06 சந்தர்ப்பங்களின் போது செலவழிக்கப்பட்டிருந்த ரூபா 1,360,074 க்கான பணத்தினை வெளிநாட்டு பயணத்திற்காக அங்கீகரித்த (229-1-1-0-1102) செலவின விடயத்தில் வரவு வைக்கப்படாது 229-1-1-3-1409 (ஏனைய) செலவின விடயத்தில் வரவு வைக்கப்பட்டு செலவழிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2019 ஏப்ரல் 08 ஆந் திகதிய இலக்கம் 03/2019, 2019 யூன் 17 ஆந் திகதிய இலக்கம் 04/2019 மற்றும் 2019 செப்தெம்பர் 24 ஆந் திகதிய இலக்கம் 2019/05 கொண்ட நிதி அமைச்சின் சுற்றுநிருபம் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட பொது வருமானம் மற்றும் வகிக்க முடிந்தளவிலான செலவின எல்லை பற்றி வன்மையாக கவனத்திற் கொள்ளப்படல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆயினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 10,700,000 க்கான பணம் இலக்கம் 229-01-01-03-1409 கொண்ட செலவின விடயத்தில் வரவு | சுற்றறிக்கைக்கு அமைவாக தூர நோக்குடன் செலவினங்களை முகாமைத்துவம் செய்து கொள்ளப்பட வேண்டும். | 1995 செப்தெம்பர் 02 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கமைய சட்ட சேவைகள் வழங்குவதற்காக அறவிடப்படும் கட்டணங்களிலிருந்து மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்களை விஞ்சி பெறப்படும் வருமானம் மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| வைக்கப்பட்டு செலவின விபரம் முன் வைக்கப்படாது காசு ஏட்டிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததுடன் அப்பணத்தினை 123 நாட்கள் தேக்கி வைத்ததன் பின்பு 2020 மே 02 அந் திகதி பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | | |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் உடன்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உடன்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் (குறிப்பு III கீழான) ஒரு நிலையத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,117,582 திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் பொறுப்புக்களுக்கான பத்திரத்திற்கு அமைவாக 02 செலவின விடயங்களுக்காக 11 சந்தர்ப்பங்களுக்கு கீழுள்ள ரூபா 85,803,631 க்கான பொறுப்புக்கள் திறைசேரிக்கு அறிவிக்கப் படாமையினால் திணைக்கள பொறுப்புக்களுக்கான மிகுதிகள் மற்றும் திறைசேரியினால் உறுதிப்படுத்தப்பட்ட | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய இலக்கம் 271/2019 கொண்ட பொதுக் கணக்கு சுற்று நிருபத்தின் படி சம்பந்தப்பட்ட சகல பொறுப்புக்களும் காட்டப்பட வேண்டும். | 100 சட்ட உத்தியோகத்தர்களுக்காக உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக சேவைச் சலுகைகள் மேற்கொண்டு செல்வதற்காக ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடு போதுமானதாக இருக்காமையினால் ‘‘சிகாஸ்’’ நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பொறுப்புக்களை திறைசேரிக்கு அறிவிப்பதற்கு இயலாது இருந்தது. அத்தியாவசிய சேவைகள் பெற்றுக்கொள்வதில் வரையறை விஞ்சப்பட்டு இருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக்களுக்கான மிகுதிகள் ஒப்பீடாகாது இருந்தன. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94(1) அமைவாக திணைக்களத்தினால் வேறுவிதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களை தவிர்த்து வருடாந்த மதிப்பீடுகளில் அதற்கான ஒதுக்கீடுகள் இருந்தால் ஒழிய வேலை அல்லது சேவை அல்லது வழங்கலுக்காக எந்தவொரு செலவினம் அல்லது உடன்பாட்டுக்கு உடன்படாது இருத்தல் வேண்டும். அது போன்றே அதற்காக வகிக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் செலவின அளவினை ஒரு போதும் நிதி ஆண்டுக்காக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டு வரையறையினை விஞ்சப்படாது, எப்படியாயினும் திணைக்களத்தின் ஒரு செலவின விடயம் சம்பந்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையினை விஞ்சி ரூபா 963,058 க்கான பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 94(1) அமைவாக வேறு விதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தினைத் தவிர்த்து வருடாந்த மதிப்பீடுகளில் அதற்கான ஒதுக்கீடுகள் இருந்தால் ஒழிய திணைக்களத்தினால் வேலை அல்லது சேவை அல்லது வழங்களுக்கான எந்தவொரு செலவினத்திற்கும் உடன்பட்டிருத்தலாகாது | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

## 2.4 அரச உத்தியோகத்தர்களின் முற்பண 'பீ' கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவை நீக்கம் செய்யப்பட்டுள்ள 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 211,560 மற்றம் சேவை யினை விட்டுப்போன 13 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,931,644 தொகை 05 வருடங்களுக்கு அறவிடப்படாது நிலுவைக் கடன் மிகுதியாக இருந்தது. | அரச உத்தியோகத்தர் களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கும் கடன் முற்பண தொகை காலதாமதமின்றி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவைக் கடன் மிகுதியினை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய இலக்கம் 2014/01 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் முக்கிய பொறுப்புக்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்காக 2019 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தினை தயாரித்து வைக்கப்பட்டிக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய இலக்கம் 01/2014 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் திட்டத்தினை தயாரிக்கப்படல் வேண்டும். | 2019 வருடத்திற்கான செயல் திட்டத்தினை மேற்படி சுற்று நிருபத்தின்படி தயாரித்து பின்னர் முன்வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை அரசு, அரச நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியமிச் சட்ட சபைகளுக்காக தேவைப்படும் சகல விதமான சட்ட சேவைகள் மற்றும் சட்ட ஆலோசனை வழங்கல் மற்றும் அரசின் விசாலமான நோக்கினை பரப்புவதில் விசேட பணியினைக்காக பங்களிப்பினை பெற்றுக் கொடுக்கும் சிரேஷ்ட மட்டத்திலான பதவிகள் தொடர்பான மொத்த பணிக்குழாமில் 257 அதாவது நூற்றுக்கு 51 காலி வெற்றிடங்கள் இருந்தன. | நிறுவனத்தின் நோக்கம் மற்றும் முக்கிய காரியங்களை பயனுள்ள வகையில் மேற்கொள்வதற்கு மிகத் தேவையான சிரேஷ்ட மட்டத்திலான பதவிகள் தொடர்பான ஆட்சேர்ப்பு செயலினை முக்கிய காரணியாக கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |